Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ் ®

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 111 | உள்ளூர் - 21.04.2026 | செவ்வாய் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 111 | வெளியூர் - 22.04.2026 | புதன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

ஒய்ந்தது தேர்தல் இறுதிக்கட்டப் பிரசாரம்!

மத்திய அரசு ஊழியர்களுக்கு முக்கிய செய்தி!

ஆம்னிகளில் கூடுதல் கட்டணம்; புகார் அளிக்கலாம்!

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!

## 'பயணிகளின் வசதி, கண்ணியத்தை கருத்தில் கொண்டு முடிவுகளை எடுங்கள்' - ரெயில்வே அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்!



புதுடெல்லி, ஏப். 21–

இந்திய ரெயில்வே துறையின் பயிற்சி அதிகாரிகள் குழுவினர் டெல்லி ஜனாதிபதி மாளிகையில் இன்று ஜனாதிபதி திரவுபதி முர்முவை சந்தித்து பேசினர். அவர்களிடம் பேசியபோது ஜனாதிபதி திரவுபதி முர்மு கூறியதாவது;–

"இந்திய ரெயில்வே, உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் சிக்கலான வலையமைப்புகளில் ஒன்றாகும். அது பயணிகளையும், பொருட்களையும் மட்டுமல்லாமல், கோடிக்கணக்கான மக்களின் லட்சியங்களையும் சுமந்து செல்கிறது. இந்த அமைப்பை நிர்வகிக்க உங்களுக்கு தொழில்நுட்பத் திறன் மட்டுமல்ல, நேர்மை, இரக்கம் மற்றும் ஆழ்ந்த பொறுப்புணர்வும் தேவைப்படும். பயணிகளின் பாதுகாப்பு, வசதி மற்றும் கண்ணியத்தை மையமாகக் கொண்டு நீங்கள் எப்போதும் முடிவுகளை எடுக்க வேண்டும். ரெயில் பாதைகளும், நெடுஞ்சாலைகளும் வெறும் போக்குவரத்து அமைப்புகள் மட்டுமல்ல; அவை பொருளாதார விரிவாக்கம், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்கான கருவிகளாகும். ஒரு ரெயில் தொலைதூர கிராமத்தை அடையும்போதோ அல்லது ஒரு நெடுஞ்சாலை தொலைதூரப் பகுதியை இணைக்கும்போதோ, அது அப்பகுதிகளின் சமூக–பொருளாதார வளர்ச்சிக்கு மகத்தான வாய்ப்புகளைத் திறக்கிறது. உள்கட்டமைப்பை நவீனமயமாக்குவது, மின்மயமாக்கலை விரிவுபடுத்துவது, மேம்பட்ட பாதுகாப்பு அமைப்புகளை அறிமுகப்படுத்துவது மற்றும் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துவது என, எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ரெயில்வே தன்னை மாற்றியமைத்து வருகிறது. இந்த மாற்றத்திற்கு நீங்கள் திறம்பட பங்களிக்கலாம்.

ஒரு செயல்திறன் மிக்க அமைப்பு, அனைவரையும் உள்ளடக்கியதாகவும், விளிம்புநிலை மக்கள் அணுகக்கூடியதாகவும் இருக்க வேண்டும். யாரும் பின்தங்கிவிடாத வளர்ச்சியே உண்மையான வளர்ச்சியாகும். வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணத்தில் இவை இன்றியமையாத அடித்தளக் கற்கள் ஆகும். மேலும் இந்த மாற்றத்தில் இளம் அதிகாரிகளான நீங்கள் ஒரு முக்கியப் பங்காற்றுவீர்கள்."

இவ்வாறு அவர் பேசினார்.

## புதிய வியூகங்களை காட்டுவோம்... அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை!



அணு ஆயுத போட்டி காரணமாக இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இணைந்து கடந்த பிப்ரவரி 28–ஆம் தேதி ஈரான் மீது தாக்குதலை தொடர்ந்தது. கடந்த சில நாட்களாக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு, ஒப்பந்தங்கள் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடைபெற இருக்கும் நிலையில், இரண்டு வார கால போர் நிறுத்தம் முடியும் முன்னதாக, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் மீண்டும் போர் மூண்டால், தெஹ்ரானிடம் "புதிய வியூகங்கள்" உள்ளன என ஈரானின் நாடாளுமன்ற சபாநாயகர் எச்சரிக்கை விடுத்தார்.

"அச்சுறுத்தல்களின் நிழலில் பேச்சுவார்த்தைகளை நாங்கள் ஏற்க மாட்டோம், மேலும் கடந்த இரண்டு வாரங்களாக போர்க்களத்தில் புதிய வியூகங்களை காட்ட நாங்கள் தயாராகி வருகிறோம்," என்று அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளில் ஈரானின் உயர்மட்டப் பேச்சுவார்த்தையாளரான காலிபாஃப், எக்ஸ் தள பதிவில் கூறியுள்ளார்.

## சென்னை என்றுமே திமுகவின் கோட்டை: முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின்!



சென்னை, ஏப். 21–


தமிழக சட்டசபை தேர்தல் நாளை மறுதினம் நடைபெற உள்ளது. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் இன்று மாலை 6 மணியுடன் அரசியல் கட்சிகளின் பிரசாரம் நிறைவடைய உள்ளது. இதனால் அரசியல் கட்சியினர் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், திமுக தலைவரும், முதல்–அமைச்சருமான மு.க.ஸ்டாலின் இன்று சென்னையின் பல்வேறு இடங்களில் பிரசாரத்தில் ஈடுபட்டார். சோழிங்க நல்லூர், வேளச்சேரி, சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளில் திமுக வேட்பாளரை ஆதரித்து வாக்குசேகரிப்பில் ஈடுபட்டார். ஒவ்வொரு தொகுதிகளிலும் மு.க.ஸ்டாலின் நடந்து சென்று மக்களை சந்தித்து வாக்கு கேட்டார்.

முதல்–அமைச்சர் சென்ற இடமெல்லாம் அவருக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பிரசாரத்தின்போது குழந்தைகளை தூக்கி முதல் – அமைச்சர் கொஞ்சி மகிழ்ந்தார். மேலும் மக்கள், இளம்பெண்கள் என பலரும் முதல்–அமைச்சருடன் செல்பி, புகைப்படம் எடுத்து கொண்டனர்.

இந்த நிலையில், இது குறித்து முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "சென்னை என்றுமே தி.மு. க.வின் கோட்டை! சோழிங்க நல்லூர் – வேளச்சேரி – சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளில் மக்கள் அளித்த அன்பும் வரவேற்பும்... "தமிழ்நாடு போராடும்.. தமிழ்நாடு வெல்லும்.." வெல்வோம் ஒன்றாக" என்று பதிவிட்டுள்ளார்.

## 'இந்தியா மறக்காது..' பஹல்காம் தாக்குதல் நினைவு தினம்.. ராணுவத்தின் வலுவான செய்தி..!




புதுடெல்லி, ஏப். 21–

கொடூரமான பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, இந்திய ராணுவம் உறுதியையும் ஒற்றுமையையும் பிரதிபலிக்கும் ஒரு சக்திவாய்ந்த செய்தியை வெளியிட்டது. தனது எக்ஸ் பதிவில் பதிவிட்டுள்ள ராணுவம் "மனிதநேயத்தின் எல்லைகள் மீறப்படும்போது, பதிலடி தீர்க்கமானதாக இருக்கும். நீதி வழங்கப்படும். இந்தியா ஒன்றுபட்டு நிற்கிறது," என்று ராணுவம் X தளத்தில் வெளியிட்டது..

**பஹல்காம் சோகம்**

இந்த தாக்குதல், அனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள பஹல்காம் அருகே, "மினி சுவிட்சர்லாந்து" என்று அழைக்கப்படும் அழகிய பைசரன் புல்வெளியில், ஏப்ரல் 22, 2025 அன்று நடந்தது. பயங்கரவாதிகள் சுற்றுலாப் பயணிகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தினர்.. இதில் 25 சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஒரு உள்ளூர் குதிரைப் பராமரிப்பாளரையும் கொன்றனர். இந்தச் சம்பவம் நாட்டை உலுக்கியதுடன், அப்பகுதியின் பாதுகாப்பு குறித்து கடுமையான கவலைகளை எழுப்பியது.

தாக்குதலுக்குப் பிறகு உடனடியாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஜம்மு மற்றும் காஷ்மீர் முழுவதும் சுமார் 44 சுற்றுலாத் தலங்களை அதிகாரிகள் மூடினர். பெரும்பாலான இடங்கள் மீண்டும் திறக்கப்பட்ட போதிலும், பைசரன் பார்வையாளர்களுக்காக மூடப்பட்டே உள்ளது. மற்றொரு பிரபலமான இடமான சந்தன்வாரியும் தொடர்ந்து மூடப்பட்டே உள்ளது, அது மீண்டும் திறக்கப்படுவதற்கான தெளிவான காலக்கெடு எதுவும் அறிவிக்கப்ப டவில்லை.காஷ்மீர் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது நினைவு நாள் நெருங்கி வருவதால், காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் பாதுகாப்புப் படைகள் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளன. பொதுமக்களி டையே பீதியைஏற்படுத்தாமல்முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர். முன்னேற்ற த்தை உறுதி செய்வதற்கும், சாத்தியமான அச்சுறுத்தல்களைத் தடுப்பதற்கும் மூத்த அதிகாரிகள் வழக்கமான ஆய்வுகளை நடத்தி வருகின்றனர். உயர் மட்ட பாதுகாப்பு ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

# ஓய்ந்தது

# தேர்தல் இறுதிக்கட்டப் பிரசாரம் வெளியாட்கள் வெளியேற உத்தரவு!

### தேர்தல் ஆணையத்தின் கடும் கட்டுப்பாடுகள் அமல்!




சென்னை, ஏப். 22–

தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டப்பேரவை தொகுதிகளும் வரும் ஏப்ரல் 23ம் தேதி அன்று ஒரே கட்டமாக வாக்குப் பதிவு (TN Elections 2026) நடைபெ றவுள்ளது. வாக்குப்பதிவு காலை 7மணி முதல் மாலை 6மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

தேர்தல் காரணமாக அரசியல் கட்சியினர் இறுதிக்கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், தேர்தல் பிரச்சாரம் இன்று (ஏப்ரல் 21) மாலையுடன் ஒய்ந்தது. எனவே, ஏப்ரல் 21ம் தேதி மாலை முதல் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

2026ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு 23.4.2026 அன்று காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும்.

21.4.2026 அன்று மாலை 6.00 மணி முதல் வாக்குப்பதிவு முடிவடையும் வரையில் 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126–ன் கீழ், பின்வரும் விதிமுறைகள் (ECI Rules) செயலில் இருக்கும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**தேர்தல் ஆணையம் விதிமுறைகள்**

தேர்தல் தொடர்பான யாதொரு பொதுக் கூட்டத்தையோ ஊர்வலத்தையோ யாரும் ஒருங்கிணைக்கவோ, நடத்தவோ அல்லது அவற்றில் பங்கேற்கவோ கூடாது. யாதொரு தேர்தல் விவகாரத்தையும், திரைப்படம், தொலைக்காட்சி, எஃப்.எம். ரேடியோ, வாட்ஸ்அப், முகநூல், டிவிட்டர் போன்ற அல்லது இது போன்ற சாதனம் வாயிலாகப் பொது மக்களின் பார்வைக்கு வைக்கக் கூடாது. குறுஞ்செய்தி மற்றும் இணையம் உட்பட அனைத்து மின்னணு வடிவிலான தகவல் தொடர்பையும் இது உள்ளடக்கும்.

பொது மக்களில் எந்தவொரு நபரையும் ஈர்க்கிற வகையில், யாதொரு இசை நிகழ்ச்சி அல்லது யாதொரு திரையரங்கச் செயல்பாடு அல்லது எவ்வித ஏதேனும் பிற கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சியை நடத்த அல்லது ஏற்பாடு செய்வதன் மூலம் அங்குள்ள பொதுமக்களிடம் யாதொரு தேர்தல் விவகாரத்தையும் யாதொரு நபரும் பரப்புரை செய்யக் கூடாது. இந்த விதிமுறை மற்றும் மேற்கண்ட இரண்டு விதிமுறைகள் எவ்விதத்தில் மீறப்பட்டாலும் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126 (2)–ன்படி, 2 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இவையிரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

தொகுதி வெளியேயிருந்து அழைத்து வரப்பட்ட அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள், கட்சிப் பணியாளர்கள் மற்றும் அத்தொகுதியின் வாக்காளர்கள் அல்லாதோர் 21.4.2026 அன்று மாலை 6.00 மணிக்கு மேல் அத்தொகுதியை விட்டு வெளியேற வேண்டும்.

கல்யாணமண்டபம், சமுதாயக்கூடம், தங்கும் விடுதிகள், விருந்தினர் இல்லம் ஆகிய இடங்களில் வெளியாட்கள் யாரேனும் தங்கியுள்ளனரா என்பதை கண்டறியப்படும்.

வேட்பாளர்களுக்கு வழங்க ப்பட்ட நட்சத்திர பேச்சாளர்கள் உட்பட வாகன அனுமதிகள், 21.4.2026 அன்று மாலை 6.00 மணி முதல் செயல்திறனற்றதாகி விடும். சட்டமன்றத் தேர்தலுக்கான ஒவ்வொரு வேட்பாளருக்கும் வாக்குப்பதிவு நாளன்று வாகன அனுமதி பின்வருமாறு,

அவரது சொந்த பயன்பாட்டிற்கான ஒரு வாகனம்.

தேர்தல் முகவரின் பயன்பாட்டிற்கான சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு வாகனம் மற்றும்

தேர்தல் முகவர் அல்லது அவரது பணியாளர்கள் பயன்பாட்டிற்கான ஒரு வாகனம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களின் அனுமதி தேர்தல் நடத்தும் அதிகாரியால் வழங்கப்படும்.

வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வருவதற்கும், வாக்குச் சாவடிகளிலிருந்து அழைத்துச் செல்வதற்கும் வேட்பாளர் அல்லது அவரது முகவர் வாகனத்தை வாடகை க்கு எடுப்பதற்கு அல்லது வாங்குவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு எந்த வொரு வேட்பாளரும் அனுமதிக்கக்கூ டாது. இது 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 133ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய முறைகேடான செயலாகும்.

இரண்டு நபர்களை மட்டுமே கொண்ட, வேட்பாளர்கள்/அரசியல் கட்சிகளின் தேர்தல் அலுவலகம் வாக்குச் சாவடியிலிருந்து 100 மீட்டர்கள் தொலைவிற்கு வெளியே அமைக்கப்படலாம். தேவையில்லாத கூட்டத்தை அவர்கள் அனுமதிக்கக் கூடாது.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.


## டிரம்பை வெளியேற்றிய அமெரிக்க ராணுவம்...!

தெஹ்ரான், ஏப். 21–

ஈரானில் சிக்கிய F–15 போர் விமான விமானியின் மீட்பு நடவடிக்கையின் போது வார் ரூமில் (War Room) இருந்த அமெரிக்கா அதிபர் டிரம்பை வெளியேற்றிய தகவல் தற்போது தெரியவந்துள்ளது.

ஈரான் அமெரிக்கா இடையிலான போரில் அமெரிக்காகவின் F –15 விமானம் ஈரானில் நுழைந்து தாக்குதல் நடத்தியபோது, அது ஈரான் தாக்குதலால் வீழ்த்தப்பட்டது.

இந்த விமானத்தில் பயணித்த இரண்டு பேரும் பாராசூட் மூலம் தப்பித்த நிலையில் அதில் ஒருவர் அமெரிக்கப் படையால் உடனடியாக மீட்கப்பட்டார். மற்றொருவரை மீட்க அமெரிக்க படையினர் பெரிய அளவில் முயற்சி எடுத்து வந்தார்கள். இதனிடையே தப்பித்து ஈரானுக்குள் இருக்கும் விமானியை கண்டுபிடித்து தரும் பொதுமக்களுக்கு பெரியளவிலான வெகுமதி வழங்கப்படும் என்று ஈரான் ராணுவம் அறிவித்தது. இதனால் இவர்களை யார் மீட்க போகிறார்கள் என்ற பரபரப்பு எழுந்த நிலையில் அந்த விமானியை வெற்றிகரமாக மீட்டதாக அமெரிக்கா அதிபர் டிரம்ப் அறிவித்தார். இந்த மீட்பு நடவடிக்கை அமெரிக்கா ராணுவத்தின் மிகப்பெரும் சாதனையாக கொண்டா டப்பட்டு வருகிறது.




இந்நிலையில் மீட்பு நடவடிக்கை போது வார் ரூம் (War Room) கூட்டங்களில் இருந்து அமெரிக்கா அதிபர் டிரம்பை அந்நாட்டின் ராணுவத்தினர் வெளியேற்றினர். இது குறித்து வெளியான செய்தியில் F–15 விமானி ஈரானில் சிக்கிக்கொண்டது தெரிந்ததும் டிரம்ப் மிகவும் ஆத்திரம் அடைந்ததாகவும் அதிகாரிகளிடம் பல மணிநேரம் கத்தி கூச்சலிட்டதாகவும் கூறப்பட்டிருந்தது. மேலும், டிரம்ப்பின் பொறுமையின்மை மற்றும்உணர்ச்சிவசப்படும் குணம் மீட்பு நடவடிக்கை பாதிக்கக்கூடும் என்பதால் அவர் வார் ரூம் (War Room) ஆலோசனை கூட்டங்களில் இருந்து வெளியேற்றப்பட்டதாகவும் முக்கிய விவரங்கள் மட்டும் அவருக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், அமெரிக்கா அதிபர் டிரம்ப்க்கு பதில் துணை அதிகாரி ஜே.டி. வான்ஸ் (J.D. Vance) மற்றும் வெள்ளை மாளிகை (White House) அதிகாரிகள் மட்டுமே நேரடி தகவல்களை அப்போது பெற்று கொண்டதாக கூறப்படுகிறது.

ஆனால், இந்த செய்திகளுக்கு வெள்ளைமாளிகை மறுப்பு தெரிவித்ததோடு மீட்பு நடவடிக்கை வெற்றிகரமாக முடிந்ததற்கு டிரம்ப்பின் தலைமையே காரணம் என்று திட்டவட்டமாக கூறியுள்ளது.

## "நினைவுகள் பறக்குது... பிரிந்தது வதைக்குது!



தோற்றம் : 27.03.1963
மறைவு : 21.04.2025

புகையாய் எழும்பி
மனதின் நினைவுகள்
தட்டி எழுப்பி,

அன்றைய நிகழ்வுகள்
நினைவில்

இவைகள் எதுவுமே திரும்ப
வராது அழுத்தும்
நிஜம் !

விழிகளின்
ஓரத்தில் கோர்த்து நிற்கும்
கண்ணீர் !

நம்முடன் இருந்து
பின் இல்லாமல் இருப்பவர்கள்
இருந்தும் பிரிந்தவர்கள் !

எதிரில் சலனமில்லாமல் !

தடவி பார்த்து மகிழ்கிறேன்
புகைப்படங்களை
கண்களில் கண்ணீருடன்!

- ஆசிரியர்
மதுரை மணி

மதுரை மணி
தலையங்கம்
செவ்வாய்க்கிழமை 21.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 08-ம் தேதி

## உலகப் போர் தொடங்கிவிட்டது?



ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான போர் உலகம் முழுவதுமே பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. கச்சா எண்ணெய் சப்ளை நின்று போனதன் காரணமாக பல்வேறு நாடுகளிலும் எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக பல்வேறு அத்தியாவசிய பொருட்களின் விலைவாசிகள் உயர்வு கண்டிருக்கின்றன. அந்த வகையில் ஈரான் நாட்டுப் போர் பல்வேறு நாடுகளின் மக்களை நேரடியாகவே பாதிப்படைய செய்திருக்கிறது. எப்போதுதான் ஈரான் போர் முடியுமோ என கோடிக்கணக்கான மக்கள் காத்திருக்கின்றனர். ஆனால் அமெரிக்காவும் ஈரான் தரப்பும் தொடர்ந்து பிடிவாதம் பிடிப்பதால் இந்த போர் எப்போது முடிவுக்கு வரும் என்பதை யாராலும் கணிக்க முடியவில்லை.

ஒரு நாள் போர் முடிவுக்கு வருவதற்கான சாதகமான பேச்சுகள் வருகின்றன அடுத்த நாளே இரு தரப்பும் அதற்கு முரணாக பேசுகின்றன. இந்த நிலையில் ஈரான் அமெரிக்கா இடையிலான போர் மட்டுமல்ல உலக அளவில் மறைமுகமாக உலகப்போரே தொடங்கிவிட்டது. உலகப் போர் தொடங்குவதற்கான ஆரம்ப நிலைகளுக்கு இந்த உலகம் சென்று விட்டது. உலகப் போரின் ஒரு பகுதிதான் அமெரிக்கா –இஸ்ரேல்– ஈரான் போர், இந்த உலகம் ஏற்கனவே உலகப் போரின் தொடக்க நிலைக்கு சென்று விட்டது ,இது அத்தனை விரைவில் முடிந்து விடாது.

பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் வரலாற்றை பல தசாப்தங்களாக ஆய்வு செய்தன் அடிப்படையில் தற்போதைய தருணம் World order எனப்படும் உலக ஒழுங்கின் ஒரு சிதைவை பிரதிபலிப்பதாக உள்ளது.


உலகம் அமெரிக்காவின் ஆதிக்கத்தில் இருந்த விதிகள் அடிப்படையில் இருந்து சிதறடிக்கப்பட்ட அதே வேளையில் 'வல்லவனே வெல்வான்' என்ற சூழலுக்கு மாறிக்கொண்டிருக்கிறது.

உக்ரைன் – ரஷ்யா போர், ஈரான் போர் முதல் மேற்காசியா முழுவதும் நிலவக்கூடிய பதட்டங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய மோதல்கள் இது ஒரு உலகப் போருக்கான இயக்கவியல் ?ஈரான் போர் முடிந்த உடனேயே உலகம் இயல்பு நிலைக்கு திரும்பவிடும் என அனைவரும் எண்ணுகிறோம் ஆனால் அது அப்படி திரும்பாது.

அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள் தலைமையிலான கூட்டமைப்பை எதிர்த்து சீனாவும் ரஷ்யாவும் மற்ற நாடுகளோடு அணி திரண்டு உள்ளன .ஒரு தெளிவான புவிசார் அரசியல் கூட்டணி உருவாகிறது. இந்த கூட்டணிகள் ஐநா சபையின் வாக்களிப்பு முறை, உலக பொருளாதாரம் வரை பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

## சினிமா துளிகள்..!

### நானெல்லாம் போயஸ் கார்டனில் வீடு வாங்கக்கூடாதா? தனுஷ் கேள்வி!



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான தனுஷ், நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டார். அப்போது அவரிடம், 'போயஸ் கார்டனில் நீங்கள் வீடு வாங்கியதும், அதுசம்பந்தமாக பேசப்பட்ட விமர்சனங்கள் குறித்து நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? என்று கேட்கப்பட்டது. அதற்கு தனுஷ் பதிலளிக்கையில், "விமர்சனங்களை எப்படி எடுத்துக்கொள்வது? என்பது நம் கையில் தான் இருக்கிறது. போயஸ் கார்டனில் நானெல்லாம் வீடு வாங்கக்கூடாதா? என்று அப்போது நான் கேட்டது, பலரிடமும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில் என்னிடம் செல்பி எடுத்த ரசிகர் ஒருவர், 'உங்களது பேச்சு என் மகனுக்கு ஊக்கத்தை தந்தது, முன்பெல்லாம் பயங்கரமாக வேலை செய்கிறான்' என்று என்னிடம் பெருமையாக தெரிவித்தார். எனவே நம் பேச்சை ஒரு உந்துசக்தியாக எடுத்துக்கொள்ளட்டும். இல்லையென்றால் மீம்ஸ்களுக்கு பயன்படட்டும். அதுவும் ஒரு பொழுதுபோக்கு தானே. அதுவும் நம் வேலை தானே. அதனால் மீண்டும் கேட்கிறேன், ஏன் நானெல்லாம் போயஸ் கார்டனில் வீடு வாங்கக்கூடாதா?". என்று குறிப்பிட்டார்.

### அந்த மாதிரி படங்களில் நடிக்க ஆசை... ஆண்ட்ரியா!



நடிப்பு தாண்டி பாடகியாகவும் கலக்கி வருபவர் ஆண்ட்ரியா. படங்கள் நடிப்பது போக, வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் பாடல் கச்சேரிகளும் நடத்தி வருகிறார்.

சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட ஆண்ட்ரியாவிடம், 'என்ன மாதிரியான கதாபாத்திரங்களில் நடிக்க ஆசை? என்று கேட்கப்பட்டது. அதற்கு ஆண்ட்ரியா "காதல், ரொமான்ஸ், ஆக்ஷன் என எல்லாமே பண்ணிவிட்டேன். ஆனால் முழுமையான காமெடி படத்தில் நான் நடித்தது கிடையாது. நகைச்சுவை படங்களிலும் பெரியளவில் காமெடி செய்தது கிடையாது. அந்தவகையில் ஒரு நல்ல நகைச்சுவை படத்தில் நடிக்க ஆசைப்படுகிறேன். அது நடக்குமா? என்று பார்க்கலாம்", என்று பதிலளித்தார்.

# ரயில் பயணிகளுக்கு ஹேப்பி நியூஸ்: 18,200 முறை இயக்கப்படும் கோடை சிறப்பு ரயில்கள் -உங்க ஏரியாவுக்கு எத்தனை?




சென்னை, ஏப். 21–

பயணிகளின் தேவை அதிகரிப்பைச் சமாளிக்கும் வகையில், இந்திய ரயில்வே இந்த ஆண்டு 18,200–க்கும் மேற்பட்ட கோடைக்கால சிறப்பு ரயில்களை இயக்கத் திட்டமிட்டுள்ளது. நாட்டின் தேசியப் போக்குவரத்து நிறுவனமான ரயில்வேயின் தகவலின்படி, ஏப்ரல் 15 முதல் ஜூலை 15, 2026 வரையிலான காலகட்டத்தில் இயக்குவதற்காக மொத்தம் 908 கோடைக்கால சிறப்பு ரயில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

"தீவிரமான கோடைக்காலப் பருவத்தில், பயணிகளுக்குச் சீரான மற்றும் வசதியான பயணத்தை உறுதி செய்வதற்காக, நாடு முழுவதும் பெருமளவிலான சிறப்பு ரயில் சேவைகளுக்கு ஒப்புதல் அளித்து ரயில்வே நிர்வாகம் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஏப்ரல் 15, 2026 முதல் ஜூலை 15, 2026 வரையிலான காலகட்டத்திற்கு, மொத்தம் 908 கோடைக்கால சிறப்பு ரயில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது; இவை அதிகரித்துள்ள பயணத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 18,262 முறை இயக்கப்படவுள்ளன.

இவற்றில், 660 ரயில்கள் (11,294 பயணங்கள்) குறித்த அறிவிப்புகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுவிட்டன. இதன் மூலம், திட்டமிடப்பட்ட சேவைகளில் கணிசமான பகுதி, பயணிகள் முன்பதிவு செய்வதற்கும் தங்கள் பயணத்தைத் திட்டமிடுவதற்கும் ஏதுவாக, வெகு முன்னரே பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது," என்று ரயில்வே அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தென் மத்திய ரயில்வே (SCR) அதிகபட்ச எண்ணிக்கையிலான கோடைக்கால சிறப்பு ரயில்களை இயக்கவுள்ளது; இது 124 ரயில்கள் மூலம் 1,184 பயணங்களை மேற்கொள்ளும். இதைத் தொடர்ந்து, மேற்கு ரயில்வே 106 ரயில்களுடனும் (2,078 பயணங்கள்), வடமேற்கு ரயில்வே 76 ரயில்களுடனும் (2,245 பயணங்கள்), வடக்கு ரயில்வே 76 ரயில்களுடனும் (2,090 பயணங்கள்), மத்திய ரயில்வே 74 ரயில்களுடனும் (3,082 பயணங்கள்), மற்றும் தென் ரயில்வே 72 ரயில்களுடனும் (558 பயணங்கள்) சிறப்புச் சேவைகளை வழங்கவுள்ளன.

கிழக்கு மத்திய ரயில்வே 64 ரயில்களை (2,711 பயணங்கள்) இயக்கவுள்ளது. இதைத் தொடர்ந்து, வட மத்திய ரயில்வே 54 ரயில்களுடனும் (1,163 பயணங்கள்), வடகிழக்கு ரயில்வே 52 ரயில்களுடனும் (814 பயணங்கள்), கிழக்குக் கடற்கரை ரயில்வே 28 ரயில்களுடனும் (410 பயணங்கள்), மற்றும் மேற்கு மத்திய ரயில்வே 28 ரயில்களுடனும் (408 பயணங்கள்) சிறப்புச் சேவைகளை வழங்கவுள்ளன. இதற்கிடையில், கிழக்கு ரயில்வே 24 ரயில்களையும் (392 பயணங்கள்), அதைத் தொடர்ந்து வடகிழக்கு எல்லை ரயில்வே 24 ரயில்களையும் (220 பயணங்கள்), தென்கிழக்கு ரயில்வே 20 ரயில்களையும் (276 பயணங்கள்), தென்கிழக்கு மத்திய ரயில்வே 10 ரயில்களையும் (122 பயணங்கள்), மற்றும் தென்மேற்கு ரயில்வே 76 ரயில்களையும் (509 பயணங்கள்) இயக்கும்.

# ஜே.இ.இ. மெயின் தேர்வு முடிவுகள் வெளியீடு: 26 மாணவர்கள் 100% மதிப்பெண் பெற்று சாதனை!



சென்னை, ஏப். 21–

தேசிய தேர்வு முகமை (NTA) திங்களன்று வெளியிட்ட ஜே.இ.இ மெயின் தேர்வு முடிவுகளின் இரண்டாம் அமர்வில், மொத்தம் 26 தேர்வர்கள், இவர்கள் அனைவரும் ஆண்கள் முழுமையான 100 மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். முழுமையான 100 மதிப்பெண்களைப் பெற்றவர்களில், ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானா மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தலா ஐந்து பேரும், ராஜஸ்தானைச் சேர்ந்த வர்கள் நான்கு பேரும், டெல்லியைச் சேர்ந்தவர்கள் மூன்று பேரும் ஆவர்.

99.9982287 என்ற என்.டி.ஏ மதிப்பெண்ணுடன், தெலங்கானாவைச் சேர்ந்த மல்லவரப்பு ஆஸ்னா, பெண் தேர்வர்களிடையே முதலிடம் பிடித்துள்ளார். இந்த மாதத் தொடக்கத்தில் நடைபெற்ற ஜே.இ.இ மெயின் தேர்வின் இரண்டாம் அமர்வுக்கான முடிவுகளை என்.டி.ஏ வெளியிட்டுள்ளது. முதல் அமர்வு ஜனவரி மாதம் நடைபெற்றது, அதன் முடிவுகள் பிப்ரவரியில் வெளியிடப்பட்டன. இந்தத் தேர்வின் இரண்டு அமர்வுகளுக்கும் சுமார் 16.05 லட்சம் தனித்துவமான தேர்வர்கள் பதிவு செய்திருந்தனர்; அவர்களில் 15.38 லட்சம் பேர் தேர்வில் பங்கேற்றனர்.

என்.டி.ஏ–வின் தகவலின்படி, இந்த ஆண்டு நடைபெற்ற ஜே.இ.இ மெயின் தேர்வில் புதிய பாதுகாப்பு அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

இதில் செயற்கை நுண்ணறிவு சார்ந்த முக ஒப்பீடு, ஓ.டி.பி அடிப்படையிலான ஆதார் இ–கே.ஒய்.சி அங்கீகாரம் மற்றும் ஆதார் அல்லது டிஜி லாக்கர்–இல் உள்ள புகைப்படத்துடன் நேரடிப் புகைப்படத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் முறை ஆகியவை அடங்கும். இரண்டாம் அமர்வில், தேர்வர்களுக்கான கட்டாய ஆதார் அங்கீகாரத்துடன் சேர்த்து, சமூக ஊடகங்களைக் கண்காணிப்பதற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பும் உறுதி செய்யப்பட்டது. மேலும், தேர்வர்கள் தங்கள் தற்போதைய அல்லது நிரந்தர முகவரி அமைந்துள்ள மாநிலங்களிலேயே தேர்வு மையங்களைத் தேர்வு செய்ய மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

தேர்வு நடைபெறும் விதத்தைக் கண்காணிக்கவும், தேர்வு மையங்களை நேரடியாகப் பார்வையிடவும் என்.டி.ஏ–வில் அமைக்கப்பட்டிருந்த ஒரு கட்டுப்பாட்டு அறை பயன்படுத்தப்பட்டது. ஐ.ஐ.டி கல்வி நிறுவனங்களில் சேருவதற்கான நுழைவுத் தேர்வான ஜே.இ.இ அட்வான்ஸ்டு, மே 17–ஆம் தேதி நடைபெற உள்ளது. பொதுப் பிரிவைச் சேர்ந்த தேர்வர்கள் ஜே.இ.இ அட்வான்ஸ்டு தேர்வை எழுதத் தகுதிபெற, ஜே.இ.இ மெயின் தேர்வில் 93.4123 என்ற சதவீத மதிப்பெண்ணை எட்டியிருக்க வேண்டும்; இந்தத் தகுதி வரம்பிற்குள் மொத்தம் 96,873 தேர்வர்கள் அடங்குவர்.

# ரயில்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான பெட்டியில் பயணிக்க இனி யு.டி.ஐ.டி. கார்டு போதும் -ரயில்வே வாரியம் உத்தரவு!



சென்னை, ஏப். 21–

செல்லுபடியாகும் யு.டி.ஐ.டி (தனித்துவமான மாற்றுத்திறனாளி அடையாள அட்டை) அட்டையை வைத்திருக்கும் மாற்றுத்திறனாளிகள் (PwDs), அவர்களுக்காகவே ஒதுக்கப்பட்ட முன்பதிவற்ற பெட்டிகளில் பயணிக்க ரயில்வே அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

ஏப்ரல் 2, 2026 தேதியிட்ட கடிதம் ஒன்றில், மண்டல ரயில்வேக்களின் அனைத்து முதன்மைத் தலைமை வர்த்தக மேலாளர்களுக்கும் (PCCMs) அனுப்பிய செய்தியில், ரயில்வே வாரியம் (RB) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுத் துறையால் (DEPwD) வழங்கப்பட்ட செல்லுபடியாகும் யு.டி.ஐ.டி அட்டைகளைக் கொண்ட மாற்றுத்திறனாளிகள், அத்துடன் இந்திய ரயில்வேயின் கீழ் சலுகைக் கட்டணங்களுக்குத் தகுதியுடையவர்கள் ஆகிய அனைவரும் 'உண்மையான பயணிகள்' (bona fide passengers) எனக் கருதப்படுவார்கள்.

மேலும், செல்லுபடியாகும் பயண அனுமதிச் சீட்டை (travel authority) அவர்கள் வைத்திருக்கும் பட்சத்தில், மாற்றுத்திறனாளிகளுக்காகவே ஒதுக்கப்பட்ட எஸ்.எல்.ஆர்.டி (இரண்டாம் வகுப்புடன் இணைந்த சரக்கு மற்றும் பிரேக் வேன் – மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப் பெட்டியுடன்) அல்லது எல்.எஸ்.எல்.ஆர்.டி பெட்டிகளில் பயணிக்க அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


"மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுத் துறையால் (DEPwD) வழங்கப்பட்ட செல்லுபடியாகும் யு.டி.ஐ.டி அட்டைகளைக் கொண்ட மாற்றுத்திறனாளிகள், மற்றும் இந்திய ரயில்வேயால் சலுகைக் கட்டண வசதி வழங்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் ஆகிய அனைவரும், செல்லுபடியாகும் பயண அனுமதிச் சீட்டை வைத்திருக்கும் பட்சத்தில், மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட எஸ்.எல்.ஆர்.டி/எல்.எஸ்.எல்.ஆர்.டி பெட்டிகளில் பயணிப்பதற்கு உண்மையான பயணிகள் எனக் கருதப்படுவார்கள் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

இப்பெட்டிகளில் பயணிக்க அனுமதி இல்லாத பிற பயணிகள் (மாற்றுத்திறனாளிகள் அல்லாதோர்) இப்பெட்டிகளில் பயணிப்பதாகக் கண்டறியப்பட்டால், அவர்கள் மீது 1989–ஆம் ஆண்டின் ரயில்வே சட்ட விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்," என்று அக்குறிப்பு மேலும் கூறியுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான இந்திய ரயில்வேயின் முன்னெடுப்புகள்; மாற்றுத்திறனாளிகள் அல்லது 'திவ்யாங்ஜன்கள்' (Divyangjans) எனப்படும் இவர்களின் நலனை மேம்படுத்துவதற்காக, இந்தத் தேசியப் போக்குவரத்து நிறுவனம் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. இவற்றுள் சலுகைக் கட்டணச் சலுகைகள், சக்கர நாற்காலிகள் மற்றும் மின்கலத்தால் இயங்கும் வாகனங்களை வழங்குதல், மற்றும் 'யாத்ரி மித்ரா சேவா' (Yatri Mitra Sewa) சேவையை அறிமுகப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

மேலும், ரயிலில் பயணம் செய்யும்போது முதலில் நடு அல்லது மேல் படுக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்த மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு, காலியாக உள்ள கீழ் படுக்கைகளை (lower berths) ஒதுக்கீடு செய்யவும் ரயில்வே நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது.


# விவசாயிகள் கவனத்திற்கு..! ரூ.2000 பணம் எப்போது வரும்..?




புதுடெல்லி, ஏப். 21–

இந்த லட்சியத் திட்டத்தின் கீழ், தகுதியுள்ள விவசாயிகளுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் ரூ. 6,000 நிதியுதவி வழங்கு கிறது. இதுவரை 22 தவணைகளாக விவசாயி களின் வங்கிக் கணக்கு களில் சுமார் ரூ. 4.25 லட்சம் கோடியை மோடி அரசு நேரடியாகச் செலுத்தி யுள்ளது.

இதுவரை தொடர்ந்து நிதியுதவி பெற்றுவரும் விவசாயிகள், தற்போது 23–வது தவணை நிதிக்காக ஆவலுடன் காத்திருக்கின்றனர். சமீபத்திய தகவல்களின்படி, வரவிருக்கும் 23–வது தவணை நிதியுதவி ஜூலை 2026–இல் விடுவிக்கப்பட வலுவான வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிகிறது. இருப்பினும், இதுகுறித்த அதிகாரப்பூர்வமான தேதியை அரசு இதுவரை அறிவிக்கவில்லை. விவசாயிகள் தங்கள் தகுதி நிலையைச் சரி பார்த்துக்கொண்டு, அதற்கேற்பத் தயாராக இருக்க வேண்டும்.



# உங்க ராசிப்படி எந்த வேலையை செஞ்சா கைநிறைய சம்பாதிக்கலாம்? ரகசியக் கணிப்பு!



வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கும் ஒவ்வொரு இளைஞனின் மனதிலும் ஓடும் மிகப்பெரிய கேள்வி, "நான் எந்த வேலைக்குச் சென்றால் முன்னுக்கு வருவேன்?" என்பதுதான். பலரும் மற்றவர்கள் செய்கிறார்கள் என்பதற்காக ஒரு படிப்பைப் படித்து, ஏதோ ஒரு வேலையில் சேர்ந்துவிட்டு, பின்னாளில் அதில் முன்னேற்றம் இல்லாமல் தவிப்பார்கள். "என் தகுதிக்கு ஏத்த சம்பளம் கிடைக்கலையே" அல்லது "எவ்வளவு உழைச்சாலும் ஒரு அங்கீகாரம் இல்லையே" என்று வருத்தப்படுபவர்கள் ஏராளம். ஜோதிட சாஸ்திரத்தின்படி, ஒருவரது பிறப்பு ஜாதகத்தில் பத்தாம் இடம் என்பது ஜீவன ஸ்தானம் எனப்படும். ஒவ்வொரு ராசிக்கும் ஒரு குறிப்பிட்ட கிரகம் அதிபதியாக இருப்பதால், அந்த ராசிக்காரர்கள் தங்களுக்குப் பொருத்தமான துறையைத் தேர்ந்தெடுத்தால் மட்டுமே மிகக் குறுகிய காலத்தில் மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும்.

**மேஷ ராசி** மற்றும் **விருச்சிக ராசி** அன்பர்களே, உங்கள் ராசிக்கு அதிபதி செவ்வாய் பகவான். நீங்கள் பிறப்பாலேயே ஒரு அதிகாரம் செய்யும் குணம் கொண்டவர்கள். உங்களுக்குப் ராணுவப் பணி, காவல்துறை, தீயணைப்புத் துறை அல்லது விளையாட்டுத் துறைகள் மிகச் சிறப்பாக அமையும். மேலும் நிலம் சார்ந்த விஷயங்கள், அதாவது ரியல் எஸ்டேட், செங்கல் சூளை, கட்டிடத் தொழில் போன்றவற்றில் நீங்கள் இறங்கினால் கோடிக்கணக்கில் சம்பாதிக்கலாம். அதேபோல் அறுவை சிகிச்சை நிபுணர்களாகவும், பொறியாளர்களாகவும் இந்த ராசிக்காரர்கள் ஜொலிப்பார்கள். உடல் உழைப்பு அதிகம் தேவைப்படும் எந்த வேலையும் உங்களுக்குப் பண மழையைக் கொடுக்கும். அலுவலகத்தில் முடங்கி இருப்பதை விட, களத்தில் இறங்கி வேலை செய்வது உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும்.

**ரிஷபம்** மற்றும் **துலாம்** ராசிக்காரர்களுக்கு அதிபதி சுக்கிர பகவான். சுக்கிரன் என்றாலே ஆடம்பரம் மற்றும் அழகுதான். நீங்கள் கலைத்துறை, சினிமா, இசை, ஆடை வடிவமைப்பு அல்லது அழகு சாதனப் பொருட்கள் விற்பனை போன்ற துறைகளைத் தேர்ந்தெடுத்தால் உங்கள் செல்வம் பல மடங்கு பெருகும். உணவுத் தொழில், குறிப்பாக இனிப்பு வகைகள் அல்லது ஆடம்பர உணவகங்கள் நடத்துவது உங்களுக்கு லாபத்தைத் தரும். வைர வியாபாரம் அல்லது வாசனை திரவியங்கள் விற்பனை செய்வதும் உங்களுக்கு யோகமான துறைகளே. நீங்கள் ஒரு வேலையைத் தேர்ந்தெடுக்கும்போது அது பார்ப்பதற்கு அழகாகவும், கவர்ச்சியாகவும் இருக்கும்படி பார்த்துக் கொண்டால் உங்கள் வருமானம் தடையின்றி வரும்.

**மிதுனம்** மற்றும் **கன்னி ராசி** அன்பர்களுக்குப் புதன் பகவான் தான் அதிபதி. புதன் என்பது புத்திசாலித்தனம் மற்றும் பேச்சுத் திறமைக்கு உரியவர். நீங்கள் தகவல் தொழில்நுட்பத் துறை (IT), ஊடகம், பத்திரிகை, ஜோதிடம், அல்லது கணக்குத் துறைகளைத் தேர்ந்தெடுத்தால் மிக வேகமாக முன்னுக்கு வருவீர்கள். சிறந்த பேச்சாளர்களாகவும், ஆசிரியர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் நீங்கள் முத்திரை பதிப்பீர்கள். தரகுத் தொழில் (Brokerage) அல்லது கமிஷன் அடிப்படையில் செய்யும் வேலைகள் உங்களுக்குப் பெரும் லாபத்தை ஈட்டித் தரும். கணிதத்தில் உங்களுக்கு இருக்கும் ஆர்வம், உங்களைப் பெரிய ஆடிட்டராகவோ அல்லது வங்கி மேலாளராகவும் மாற்றும் வல்லமை கொண்டது.

**கடக** ராசிக்காரர்களுக்குச் சந்திரன் அதிபதி என்பதால், நீங்கள் திரவப் பொருட்கள் சார்ந்த தொழில்களில் வெற்றி பெறுவீர்கள். பால் வியாபாரம், குடிநீர் விற்பனை, கப்பல் துறை, அல்லது ரசாயனப் பொருட்கள் தயாரிப்பில் நீங்கள் அதிக லாபம் ஈட்டலாம். உணவகத் தொழில் உங்களுக்கு மிகச் சிறப்பாக அமையும், ஏனென்றால் சந்திரன் உணவுக்கு அதிபதி. அதேபோல் சிம்ம ராசிக்காரர்களுக்குச் சூரியன் அதிபதி என்பதால், நீங்கள் ஒருபோதும் ஒருவருக்குக் கீழே வேலை செய்ய விரும்ப மாட்டீர்கள். அரசாங்க வேலை, அரசியல், தலைமைப் பண்பு மிக்க பதவிகள் அல்லது தந்தையின் தொழிலைச் செய்வது உங்களுக்குப் பெரும் புகழையும் பணத்தையும் தரும். நகை வியாபாரம் அல்லது மருந்து விற்பனைத் துறையும் உங்களுக்குக் கை கொடுக்கும்.

**தனுசு** மற்றும் **மீன ராசி** அன்பர்களுக்குக் குரு பகவான் அதிபதி. நீங்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டும் வேலையைச் செய்தால் செல்வம் உங்களைத் தேடி வரும். வங்கிப் பணி, கல்வி நிறுவனங்கள் நடத்துவது, ஆன்மீகச் சொற்பொழிவு, அல்லது சட்டத் துறையில் நீங்கள் பெரிய ஆளாக வரலாம். நீதிபதிகளாகவும், ஆலோசகர்களாகவும் இந்த ராசிக்காரர்கள் அதிகம் ஜொலிப்பார்கள். தங்கம் தொடர்பான முதலீடுகள் அல்லது மஞ்சள் மற்றும் தானியங்கள் சார்ந்த வியாபாரம் உங்களுக்குப் பெரும் லாபத்தைக் கொடுக்கும். மற்றவர்களுக்கு அறிவுரை சொல்லும் எந்த வேலையும் உங்கள் பாக்கெட்டை நிரப்பும் என்பதில் சந்தேகமே இல்லை.

**மகரம்** மற்றும் **கும்ப ராசி** அன்பர்களுக்குச் சனி பகவான் அதிபதி. நீங்கள் கடின உழைப்பிற்கு அஞ்சாதவர்கள். இரும்புத் தொழில், கனிம வளங்கள், பெட்ரோலியப் பொருட்கள் அல்லது பழைய பொருட்களை மறுசுழற்சி செய்யும் தொழில்களில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். சுரங்கத் தொழில், தோல் பதனிடும் தொழில் அல்லது பாரிய இயந்திரங்கள் தொடர்பான வேலைகள் உங்களுக்கு யோகத்தைத் தரும். நீதித் துறை அல்லது சமூக சேவையிலும் நீங்கள் நல்ல நிலையை அடையலாம். சனி பகவான் நிதானமானவர் என்பதால், உங்கள் வருமானம் மெதுவாகத் தொடங்கினாலும், காலப்போக்கில் அது ஒரு நிலையான சாம்ராஜ்யமாக மாறும்.

நம்ம ஊர்ல சொல்லுவாங்க, "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்"னு. அதுபோல உங்கள் ராசிக்குரிய சரியான துறையை நீங்கள் கண்டுபிடித்து விட்டால், பாதி கிணற்றைத் தாண்டியது போலத்தான். ஒருவருக்குக் கலை வரும் இடத்தில் அவர் கல்லுடைக்கப் போனால் வெற்றி கிடைக்காது. எனவே, உங்கள் ராசிக்குச் சொல்லப்பட்ட துறைகளை ஒருமுறை ஆராய்ந்து பாருங்கள். உங்களுக்குள் இருக்கும் திறமைக்கும் உங்கள் ராசி அதிபதிக்கும் தொடர்பு இருக்கும் பட்சத்தில், உங்களை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. கடின உழைப்போடு கிரகங்களின் துணையும் சேரும்போது, நீங்கள் வெறும் வேலையாளாக இல்லாமல் ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கும் முதலாளியாக மாறுவீர்கள். நம்பிக்கையோடு உங்கள் துறையைத் தேர்ந்தெடுங்கள், வெற்றி நிச்சயம்!

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## இட்லி, தோசை பிரியர்களே கவனம்... முக்கிய எச்சரிக்கை!



இட்லி, தோசை, வடை போன்ற புளிக்கவைக்கப்பட்ட உணவுகள் பல இந்திய வீடுகளில் பிரதான உணவாக உள்ளன. அவை வயிற்றுக்கு இலேசானதாகவும், எளிதில் செரிமானம் ஆகக்கூடியதாகவும், குடல் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கக்கூடியதாகவும் அறியப்படுகின்றன. இருப்பினும், கோடை காலங்களில், இதே உணவுகளைக் கவனமாகக் கையாளாவிட்டால், அவை ஆபத்தானவையாக மாறக்கூடும். அதிக வெப்பநிலையும் ஈரப்பதமும் புளிக்கும் செயல்முறையைத் துரிதப்படுத்தி, கெட்டுப்போவதற்கும் மாசுபடுவதற்கும் உள்ள வாய்ப்புகளை அதிகரிக்கக்கூடும்.

**கோடைக்காலத்தில் புளித்த உணவுகளுக்கு ஏன் கூடுதல் கவனம் தேவை?**

புளிக்கவைக்கப்பட்ட உணவுகள், பாக்டீரியா, ஈஸ்ட் அல்லது பூஞ்சைகள் போன்ற நுண்ணுயிரிகளின் செயல்பாட்டின் மூலம் உருவாக்கப்படுகின்றன. இந்தச் செயல்பாட்டின் போது, இந்த நுண்ணுயிரிகள் இயற்கையான சர்க்கரைகளையும் மாவுச்சத்துக்களையும் அமிலங்கள், வாயுக்கள் அல்லது ஆல்கஹால் போன்ற எளிய சேர்மங்களாக உடைக்கின்றன. இது உணவைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், அதன் சுவை, தன்மை மற்றும் ஊட்டச்சத்து மதிப்பையும் மேம்படுத்துகிறது.

கோடை காலத்தில், காற்றில் உள்ள வெப்பம் மற்றும் ஈரப்பதம் காரணமாக இந்தச் செயல்முறை மிகவும் வேகமாக நடைபெறுகிறது. பொதுவாக 8 முதல் 10 மணி நேரம் புளிக்க வேண்டிய மாவுக்கலவை, கிட்டத்தட்ட பாதி நேரத்தில் தயாராகிவிடும். கவனிக்காமல் விட்டால், அது அளவுக்கு அதிகமாகப் புளித்து, அதிகப்படியான புளிப்புச் சுவைக்கும் மற்றும் உடல்நல அபாயங்களுக்கும் வழிவகுக்கும்.

**புளிக்கவைக்கப்பட்ட உணவுகள் குறித்து FSSAI கூறுவது என்ன?**

இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம், உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஒழுங்குமுறை, 2011–இன் கீழ் விரிவான விதிகளை வகுத்துள்ளது. இந்த வழிகாட்டுதல்கள், நொதிக்கவைக்கப்பட்ட உணவுகள் பாதுகாப்பானவை, சுகாதாரமானவை மற்றும் தரநிலைகளைப் பூர்த்தி செய்கின்றன என்பதை உறுதி செய்கின்றன.

புளிக்கவைக்கப்பட்ட பால் பொருட்கள்: FSSAI விதிகளின்படி, புளிக்கவைக்கப்பட்ட பால் பொருட்களில் நிறை அடிப்படையில் குறைந்தபட்சம் 2.9% பால் புரதம் இருக்க வேண்டும். மேலும், லாக்டிக் அமிலமாக அளவிடப்படும் அமிலத்தன்மை குறைந்தபட்சம் 0.45% இருக்க வேண்டும். இந்த அளவுருக்கள் பொருளின் தரம், சுவை மற்றும் பாதுகாப்பை நிலைநிறுத்த உதவுகின்றன.

புளிக்கவைக்கப்பட்ட பால் பொருட்களில், புளித்த பின் வெப்பப் பதப்படுத்தப்படும் பொருட்களுக்கும், அப்படியே விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கும் விதிமுறைகள் தனித்தனியாக வகுக்கப்பட்டுள்ளன. இந்த வேறுபாடு, பொருட்களின் சேமிப்பு காலம் (shelf life), கையாளுதல் மற்றும் நுகர்வு பாதுகாப்பில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

FSSAI வெளியிட்டுள்ள உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஒழுங்குமுறை, 2011–ன் படி, புளிப்பால் பொருட்கள் கன உலோகங்கள், பதப்படுத்திகள் மற்றும் பிற மாசுபடுத்திகள் தொடர்பான நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பு வரம்புகளுக்குள் இருக்க வேண்டும். இது உணவு நுகர்வுக்கு முழுமையாக பாதுகாப்பானதாக இருப்பதை உறுதி செய்கிறது.

புளிக்கவைக்கப்பட்ட சோயாபீன் பொருட்கள்: சோயாபீனில் இயற்கையாக இருக்கும் டிரிப்சின் தடுப்பான்கள் (Trypsin inhibitors) செரிமானத்தை பாதிக்கக்கூடிய ஊட்டச்சத்து எதிர்ப்பு சேர்மங்களாகக் கருதப்படுகின்றன. இதனால், புளிக்கவைக்கப்பட்ட சோயாபீன் பொருட்கள் தயாரிக்கும்போது, இந்தச் சேர்மங்களை செயலிழக்கச் செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உணவு எளிதில் செரிமானமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும்.

## மத்திய அரசு ஊழியர்களுக்கு முக்கிய செய்தி!




டெல்லி,ஏப். 21–

தனியார் துறை ஊழியர்களுக்கு ஒரு முக்கிய செய்தி கிடைத்துள்ளது. நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டு வரும் ஒரு முக்கிய விஷயத்தில் புதிய அப்டேட் வந்துள்ளது. வருங்கால வைப்பு நிதி (PF) விதிமுறைகளில் பெரும் மாற்றங்களைச் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, ஊதிய உச்சவரம்பில் மாற்றங்கள் வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் (EPFO) கீழ் தற்போது நடைமுறையில் உள்ள, ஊதிய வரம்பை நிர்ணயிக்கும் உச்சவரம்பை, ₹15,000 –லிருந்து ₹25,000 முதல் ₹30,000 வரையிலான வரம்பிற்கு அரசு உயர்த்தக்கூடும் என வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதிகரித்து வரும் ஊதியங்கள் மற்றும் பணவீக்கத்திற்கு ஏற்ப இந்த வரம்பைப் மாற்ற வேண்டும் என்று சமீபத்தில் உச்ச நீதிமன்றமும் பரிந்துரைத்திருந்தது.

**அரசின் திட்டம்?**

ESI (ESIC) திட்டத்தின் கீழ் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதிய உச்சவரம்பையும் அதிகாரிகள் மறுமதிப்பீடு செய்து வருகின்றனர். EPFO மற்றும் ESI ஆகிய இரண்டிற்குமான வரம்புகளை ஒருங்கிணைப்பதே இதன் நோக்கமாக உள்ளது. இதன் மூலம் நிறுவனங்கள் விதிமுறைகளுக்கு இணங்குவதும், தங்கள் வணிகத்தை நடத்துவதும் எளிதாகும். தற்போது, ESI–க்கான ஊதிய வரம்பு மாதத்திற்கு ₹21,000–ஆக உள்ளது. EPFO –க்கான ஊதிய உச்சவரம்பு ₹15,000 ஆக உள்ளது.

# சித்திரை திருவிழா: மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கல்யாண ஆன்லைன் டிக்கெட் முன்பதிவு விறுவிறுப்பு!




மதுரை, ஏப். 21–

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலின் சித்திரை பெரு விழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் சிகர நிகழ்ச்சியான மீனாட்சி–சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் வருகிற 28–ந் தேதி நடக்கிறது. திருக்கல்யாணத்தை நேரில் கண்டு தரிசிக்க விரும்பும் பக்தர்களின் வசதிக்காக ரூ.200 மற்றும் ரூ.500–க்கான கட்டண சீட்டுகளை பெறுவதற்கு முன்பதிவு செய்வதற்கான ஆன்லைன் மற்றும் நேரடி முன்பதிவு நேற்று முன்தினம் தொடங்கியது.

ஆன்லைன் மூலமாக முன்பதிவு செய்யும் பக்தர்கள் https://hrce.tn.gov.in மற்றும் கோவில் இணையதளமான https://maduraimeenakshi.hrce.tn.gov.in–னம் தொடங்கி 22–ம் தேதி இரவு 9 மணி வரை நடைபெறவுள்ளது. பின்னர் திருக்கல்யாண டிக்கெட் குலுக்கல் முறையில் தேர்வு செய்தவர்களுக்கு அலைபேசி, இமெயிலில் 23–ந் தேதி குறுந்தகவல் தெரிவிக்கப்படும்.

டிக்கெட் கிடைத்ததற்கான குறுந்தகவல் பெற்றவர்கள் 24–ந் தேதி முதல் 27–ந் தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை எல்லீஸ்நகரில் அமைந்துள்ள யாத்ரிநிவாஸ் தங்கும் விடுதியில் தங்களுக்கு வந்த தகவல்களை காண்பித்து பணம் செலுத்தி திருக்கல்யாண கட்டண சீட்டை பெறலாம். ரூ.500 பதிவில் ஒருவர் 2 கட்டண சீட்டுகளும், ரூ.200 பதிவில் ஒருவர் 3 கட்டண சீட்டுகள் மட்டுமே பதிவு செய்ய அனுமதிக்கப்படுவர்.

ஒரே நபர் ரூ.500, ரூ.200 இரண்டையும் பதிவு செய்ய இயலாது. ஒரு பதிவிற்கு ஒரு கைபேசி எண் மட்டுமே பயன்படுத்த வேண்டும். நேரடியாக விண்ணப்பிக்கும் பக்தர்களின் வசதிக்காக கோவிலுக்கு சொந்தமான எல்லீஸ்நகரில் அமைந்துள்ள யாத்ரிநிவாஸ் தங்கும் விடுதியில் டிக்கெட் முன்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. அங்கு கோவில் பணியாளர்கள் 2 கணினிகள் மூலம் முன்பதிவு செய்து கொடுக்கிறார்கள்.

கட்டண சீட்டு முன்பதிவு செய்ய விரும்பும் பக்தர்கள் ஆதார் அட்டை, போட்டோ, கைபேசி எண், மின் அஞ்சல் முகவரியை வழங்கி முன்பதிவு செய்து வருகின்றனர். கடந்த 2 நாட்களாக நேரடி முன்பதிவு செய்யும் இடத்தில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது. அவர்களை கோவில் பணியாளர்கள் வரிசையாக நிற்க வைத்து பதிவு செய்து வருகின்றனர்.

அதன்படி ரூ.500 மற்றும் ரூ.200 டிக்கெட்டுகளை சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஆன்லைன் மற்றும் நேரில் சென்று பதிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இதன் மூலம் இந்தாண்டு திருக்கல்யாணத்தை காணும் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஹார்முஸ் முடக்கத்திற்கு மாற்றுப்பாதை திறப்பு?



பாக்தாத், ஏப். 21–

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி மாதம் 28–ந்தேதி ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. ஈரானும் பதில் தாக்குதல் நடத்தியது. ஒரு மாதத்திற்கு மேலாக இந்த போர் நீடித்தது. கடந்த 7–ந்தேதி இரண்டு வார இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதனிடையே, ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதன் விளைவாக, உலகம் முழுவதும், குறிப்பாக ஆசியாவில், கடுமையான எரிசக்தி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் போர் காரணமாக 10 ஆண்டுகளுக்கும் மேலாக மூடப்பட்டிருந்த ஈராக் மற்றும் சிரியா இடையேயான எல்லை கடக்கும் பாதை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இதன்படி சிரிய உள்நாட்டுப் போரினால் 2011–ல் மூடப்பட்ட ராபியா (ஈராக்) மற்றும் யருபியா (சிரியா) எல்லைப் பகுதிகள், இரு நாட்டு அதிகாரிகளின் முன்னிலையில் அதிகாரப்பூர்வமாகத் திறக்கப்பட்டது.

இது ஈராக் மற்றும் சிரியா நாடுகளுக்கு இடையே கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக மூடப்பட்டிருந்த முக்கிய எல்லை கடப்புப் பகுதியாகும். போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி முடங்கியுள்ள நிலையில், அதற்கு மாற்றாக சிரியா வழியாக எண்ணெய் ஏற்றுமதி செய்ய, வர்த்தகம் மற்றும் எண்ணெய் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கில் மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தனது தேசிய வரவுசெலவு திட்டத்தில் ஏறக்குறைய 90 சதவீதம் எண்ணெய் வருவாயை சார்ந்துள்ள ஈராக்கிற்கு, இந்த முன்னேற்றம் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்று கூறப்படுகிறது. மீண்டும் இந்த எல்லை திறக்கப்பட்டதைக் குறிக்கும் விழாவின் போது, சுமூகமான போக்குவரத்து மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை எளிதாக்குவதற்காக, ஒருங்கிணைப்பில் சாத்தியமான மேம்பாடுகள் குறித்து ஈராக் மற்றும் சிரிய அதிகாரிகள் விவாதித்தனர். இந்த எல்லை திறப்பு, அண்டை நாடுகளுக்கு இடையே பொருளாதார வளர்ச்சியையும் ஒத்துழைப்பையும் வளர்க்கக்கூடிய ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகப் பாராட்டப்படுகிறது.

# ஆம்னிகளில் கூடுதல் கட்டணம்; புகார் அளிக்கலாம்!

சென்னை, ஏப். 21–

மக்கள் வாக்களிக்க செல்வதை பயன்படுத்தி ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலித்தால் புகார் அளிக்கலாம் என போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம் தெரிவித்துள்ளது.

| வ.எண் | ஆணையரகம் | தொலைபேசி எண்கள் |
|---|---|---|
| 1 | போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை | 1800 425 6151 |
| 2 | இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (வடக்கு) | 99442 53404 |
| 3 | இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (தெற்கு) | 97905 50052 |
| 4 | இணைப்போக்குவரத்து ஆணையரகம், மதுரை | 90953 66394 |
| 5 | இணைப்போக்குவரத்து ஆணையரகம், கோயம்புத்தூர் | 91235 93971 |
| 6 | துணைப்போக்குவரத்து ஆணையரகம், விழுப்புரம் | 96773 98825 |
| 7 | துணைப்போக்குவரத்து ஆணையரகம், வேலூர் | 98400 23011 |
| 8 | துணைப்போக்குவரத்து ஆணையரகம், சேலம் | 78456 36423 |
| 9 | துணைப்போக்குவரத்து ஆணையரகம், ஈரோடு | 80569 40040 |
| 10 | துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருச்சிராப்பள்ளி | 90660 32343 |
| 11 | துணைப்போக்குவரத்து ஆணையரகம், விருதுநகர் | 90257 23800 |
| 12 | துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருநெல்வேலி | 96981 18011 |
| 13 | துணைப்போக்குவரத்து ஆணையரகம், தஞ்சாவூர் | 95850 20865 |

# தொடர் விடுமுறையால் டாஸ்மாக் கடைகளில் அலைமோதிய கூட்டம்!




சென்னை, ஏப். 21–

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் 23ஆம் தேதி நடைபெற இருக்கிறது. தேர்தலுக்கு இன்னும் இரண்டு நாட்களே இடைவெளி உள்ள நிலையில், சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் வகையில் டாஸ்மாக் கடைகளுக்கு முன்கூட்டியே விடுமுறை விட தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டது.

டாஸ்மாக் கடைகள் அனைத்தும் 21.04.2026 (செவ்வாய்க்கிழமை) அன்று முற்பகல் 10 மணி முதல் வாக்குப்பதிவு நாளான 23.04.2026 (வியாழக்கிழமை) அன்று நள்ளிரவு 12 மணி வரையும், வாக்கு எண்ணிக்கை நாளான 04.05.2026 (திங்கட்கிழமை) ஆகிய 4 நாட்களுக்கு மூடப்பட்டிருக்கும்.

அதன்படி நாளை முதல் வாக்குப்பதிவு நாளான 23–ம் தேதி வரையும், வாக்கு எண்ணிக்கை நாளான மே நான்காம் தேதியும் டாஸ்மாக் மது கடைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.

அதனால் இன்று மாலை முதல் தமிழகத்தில் உள்ள டாஸ்மார்க் மது கடைகள் அனைத்திலும் மது பிரியர்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது தலைநகர் சென்னையில் உள்ள மது கடைகளிலும் கூட்டம் நிரம்பி வழிந்ததை காண முடிந்தது. மூன்று நாட்களுக்கு தேவையான மதுபான வகைகளை மது பிரியர்கள் வாங்கிச் சென்றனர். இதனால் பண்டிகை காலங்களில் நாளொன்றுக்கு விற்பனையாகும் மதுபான அளவைவிட இன்று கூடுதலாக மது விற்பனை நடைபெற்றிருக்கும் என்று டாஸ்மாக் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வட இந்திய மாநிலங்களில் வெப்ப அலை தாக்கும் அபாயம்: தமிழகத்திற்கு பாதிப்பா..?



புதுடெல்லி, ஏப். 21–

இந்திய வானிலை ஆராய்ச்சித்துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது:–

வடமேற்கு இந்தியா, மத்திய இந்தியா மற்றும் கிழக்கு இந்தியாவை ஒட்டிய இடங்களில் 20–ந் தேதி முதல் 25–ந் தேதிவரை வெப்ப அலை வீசும். குறிப்பாக, அரியானா, சண்டிகார், டெல்லி, பஞ்சாப், கிழக்கு ராஜஸ்தான், விதர்பா, சத்தீஷ்கார், மேற்கு உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம், மேற்கு வங்காளம், ஜார்கண்ட், ஒடிசா, கிழக்கு உத்தரபிரதேசத்தின் சில பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் ஆங்காங்கே வெப்ப அலை வீசும்.

மேற்கு வங்காளத்தில் கங்கைக்கரையை ஒட்டிய பகுதிகளில் சில இடங்களில் 26–ந் தேதிவரை வெப்பமும், ஈரப்பதமான வானிலையும் நிலவும்.

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் ஆகிய பகுதிகளில் 22–ந் தேதிவரை அதிக வெப்பநிலையும், ஈரப்பதமான வானிலையும் நிலவும். கேரளம், மாஹே, கடலோர ஆந்திரா, ஏனாம் ஆகிய பகுதிகளில் 24–ந் தேதிவரையும், குஜராத் கடலோர பகுதிகளில் 24 மற்றும் 25–ந் தேதிகளிலும் அதிக வெப்பநிலையும், ஈரப்பதமான வானிலையும் நிலவும். அரியானா, சண்டிகார், மேற்கு உத்தரபிரதேசம். மத்தியபிரதேசம், விதர்பா ஆகிய பகுதிகளில் 20 மற்றும் 21–ந் தேதிகளில் இரவு நேர வெப்பநிலை அதிகமாக இருக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## மெட்ராஸ் ஐஐடியில் 40 உதவிப் பேராசிரியர்கள் காலியிடங்கள்!

பணி: உதவி பேராசிரியர்.

மொத்த இடங்கள்: 40.

காலியிடங்கள் ஏற்பட்டுள்ள பாடப்பிரிவுகள் விவரம்: ஏரோஸ்பேஸ் இன்ஜினியரிங், அப்ளைடு மெக்கானிக்ஸ் மற்றும் பயோ மெடிக்கல் இன்ஜினியரிங், பயோ–டெக்னாலஜி, கெமிஸ்ட்டிரி, கெமிக்கல் இன்ஜினியரிங், சிவில் இன்ஜினியரிங், கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் இன்ஜினியரிங், டேட்டா சயின்ஸ் மற்றும் இன்ஜினியரிங், எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங், இன்ஜினியரிங் டிசைன், ஹியூமனைடிஸ் மற்றும் சோஷியல் சயின்சஸ், மேனேஜ்மென்ட் ஸ்டடீஸ், மெடிக்கல் சயின்சஸ் மற்றும் டெக்னாலஜி, மெக்கானிக்கல் இன்ஜினியரிங், மெட்டலர்ஜிக்கல் மற்றும் மெட்டீரியல்ஸ் இன்ஜினியரிங், ஓஷன் இன்ஜினியரிங், இயற்பியல், ஸ்கூல் ஆப் இன்டர்டிஸிப்பினினரி ஸ்டடீஸ்.

வயது: 36க்குள். எஸ்சி/எஸ்டி/ஓபிசி/மாற்றுத்திறனாளிகள் பிரிவினருக்கு அரசு விதிமுறைப்படி தளர்வு அளிக்கப்படும். வயது வரம்பு: 31.12.2026 தேதியின்படி கணக்கிடப்படும்.

சம்பளம்: ரூ.70,900– ரூ.1,01,500.

காலியிடங்கள் ஏற்பட்டுள்ள பாடப்பிரிவுகள் அல்லது அதற்கு இணையான பாடப்பிரிவுகள் ஏதாவதொன்றில் முதல் வகுப்பில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டம் பெற்று பி.ஹெச்டி பட்டமும் பெற்றிருக்க வேண்டும். கல்வித்தகுதி தொடர்பான கூடுதல் விவரங்கள் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரரின் கல்வித்தகுதி, பணி அனுபவம், கற்பிக்கும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர். இதுபற்றிய விவரம் இ.மெயில் மூலம் விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படும். www. facapp. iitm.ac.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைன் விண்ணப்பத்துடன் தேவையான சான்றிதழ்களின் நகல்களை ஸ்கேன் செய்து அனுப்ப வேண்டும். பின்னர் ஆன்லைன் விண்ணப்ப நகலை பதிவிறக்கம் செய்து கைவசம் வைத்துக் கொள்ளவும். மேலும் கூடுதல் விவரங்களுக்கு www.iitm.ac.in என்ற இணையதளத்தை பார்க்கவும்.

ஆன்லைனில் விண்ணப்பிக்க கடைசி நாள்: 15.10.2026.

# அட்சய திருதியையொட்டி நகைக்கடைகளில் அலைமோதிய கூட்டம்.. இத்தனை கிலோ தங்கம் விற்பனையா..?

சென்னை, ஏப். 21–

தங்கம் விலை நேற்று (ஏப். 20) கிராம் 14,300 ரூபாய்க்கும், சவரன் 1,14,400 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. சட்டமன்ற தேர்தல் ஓட்டுப்பதிவுக்கு இரு தினங்களே உள்ளதால், வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் வழங்குவதை தடுக்க, வாகன சோதனையை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் தீவிரப்படுத்தி உள்ளனர்.



1 பவுன் வாங்குவதாக இருந்தாலும் லட்சத்திற்கு மேல் பணம் கையில் கொண்டு செல்ல வேண்டும். ஆனால் தற்போது தேர்தல் நடத்தை விதிமுறை வேறு அமலில் இருப்பதால் ரொக்கப்பணம் ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு சென்றால் தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்து விடுவார்களோ? என்று இல்லத்தரசிகள் ஒருவித அச்சத்திலேயே நகைக்கடைகளுக்கு சென்று திரும்பியதை காணமுடிந்தது. இருப்பினும், இந்த அட்சய திருதியையில், கடந்த இரு நாட்களாக தமிழக நகை கடைகளில், 25 ஆயிரம் கிலோ தங்க நகைகள் விற்பனையாகி உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது, 1 கிலோ தங்கம் 1.50 கோடி ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எனவே, 25 ஆயிரம் கிலோ தங்க நகைகளின் மதிப்பு, 37,500 கோடி ரூபாயாக உள்ளது.

கடந்த அட்சய திருதியைக்கு, கிலோ தங்கம் விலை 98 லட்சம் ரூபாயாக இருந்தது. அந்த ஆண்டில் விற்ற 25 ஆயிரம் கிலோ தங்க நகைகளின் மதிப்பு, 24,500 கோடி ரூபாயாக இருந்தது. இந்த ஆண்டும் ஒரே அளவில் தங்கம் விற்பனையாகி இருந்தாலும், மதிப்பின் அடிப்படையில், கடந்த ஆண்டை விட கூடுதலாக, 13 ஆயிரம் கோடி ரூபாய்க்கு விற்பனை அதிகரித்துள்ளது. கடந்த இரு நாட்களாக, 25 ஆயிரம் கிலோ தங்க நகைகள் விற்பனையாகி உள்ளநிலையில் இது மதிப்பின் அடிப்படையில் 40,000 கோடி ரூபாயை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## கரும்பு சாறு பிழிந்து முதல்வர் ஸ்டாலின் பிரசாரம்; அண்ணாமலை- வானதி பைக் பேரணி!

சென்னை, ஏப். 21–

சென்னை சைதாப்பேட்டையில் முதல்வர் ஸ்டாலின் கரும்பு சாறு பிழிந்து தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். கோவையில் வானதி சீனிவாசன் உடன் அண்ணாமலை இணைந்து இருசக்கர பேரணி பிரசாரம் செய்தார்.





சென்னையை அடுத்த சோழிங்கநல்லூர் தொகுதியில் நடந்து சென்று, பொது மக்களை சந்தித்து திமுக வேட்பாளருக்கு ஆதரவாக முதல்வர் ஸ்டாலின் ஓட்டு சேகரித்தார். சாலையில் நடந்து சென்ற மக்களிடம் கை குலுக்கியும், புகைப்படம் எடுத்தும் முதல்வர் ஸ்டாலின் மகிழ்ந்தார்.

தொடர்ந்து வேளச்சேரி காந்தி சாலையில் நடந்து சென்று காங்கிரஸ் வேட்பாளர் அசன் மௌலானாவுக்கு ஆதரவாக முதல்வர் ஸ்டாலின் ஓட்டு சேகரித்தார். சைதாப்பேட்டையில் அமைச்சர் மா.சுப்பிரமணியனை ஆதரித்து ஆட்டோவில் சென்று முதல்வர் ஓட்டு சேகரித்தார். சைதாப்பேட்டையில் ஒரு கடையில் முதல்வர் ஸ்டாலின் கரும்பு சாறு பிழிந்து பிரசாரம் செய்தார்.

**பைக் பேரணி**

அதேபோல், கோவையில் வானதி சீனிவாசன் உடன் அண்ணாமலை இணைந்து இருசக்கர பேரணி பிரசாரம் செய்தார். வானதி சீனிவாசனை அமர வைத்து இருசக்கர வாகனத்தை அண்ணாமலை ஓட்டிச்சென்றார். பாஜ நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**அன்பு தம்பிக்கு நன்றி**

நிருபர்களிடம் வானதி சீனிவாசன் கூறுகையில், ''அன்பு தம்பி அண்ணாமலைக்கு நன்றி. யார் வளர்ச்சிக்காக வேலை செய்வார்கள், மக்களுக்காக உழைப்பார்கள் என்று கோவை மக்களுக்கு தெளிவாக தெரியும், என்றார்.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் ரகுபதி திருமயம் ஒன்றியத்துக்கு உட்பட்ட பாப்பம்பட்டி வீரக்குடி உள்ளிட்ட பகுதிகளில் இறுதிக்கட்ட பிரச்சாரத்தை மேற்கொண்டார். அப்போது வாக்காளர்கள் மத்தியில் பேசிய அவர் பேருந்து வசதி தண்ணீர் வசதி சாலை வசதி அனைத்து பிரச்சனைகளையும் தொண்ணூறு சதவீதம் தீர்வு காணப்பட்டதாகவும் மீதமுள்ள பிரச்சனைகளை மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்த உடன் தீர்வு காணப்படும் எனக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில், தேர்தல் உபகரணங்களை வாக்குசாவடி மையங்களுக்கு அனுப்பிவைக்க, தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதை தேனி மாவட்ட தேர்தல் அதிகாரி ரஞ்ஜித்சிங் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.



பழனியில், பழனி அரசு மருத்துவமனை வளாகத்தில், ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் 25 பேர், பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதை கண்டித்து, வருகின்ற சட்டமன்ற தேர்தல் 2026–யை புறக்கணிப்பதாக கூறி ஆர்ப்பாட்டம் செய்தனர்.



இருசக்கர வாகனத்தில் சென்று இறுதிக்கட்ட பிரச்சாரத்தை மேற்கொண்ட திமுக வேட்பாளர். புதுக்கோட்டை தொகுதி திமுக வேட்பாளர் முத்துராஜா இறுதிக்கட்ட பிரச்சாரமாக வீதி வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார் புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட நரிமேடு, சமத்துவபுரம் ஜீவா நகர் உள்ளிட்ட பகுதிகளில் இருசக்கர வாகனத்தில் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டார்

## திமுக கூட்டணியில் இணைந்ததுக்கு காரணம் என்ன; உண்மையை உடைத்த கமல்!



சென்னை, ஏப். 21–

மகளிர் உரிமை தொகை திட்டத்தால் தான் திமுக கூட்டணியில் இணைந்தேன் என மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல் தெரிவித்து உள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தலில் திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டார். அந்தவகையில் திருச்சியில் பிரசாரம் மேற்கொண்ட கமல் பேசியதாவது: உண்மையான தலைவன் என்றால் மக்களுக்கு பிரச்னை வரும் போது ஓடி வரணும்; ஓடி போய்விடக் கூடாது. நான் சொன்னதில் ஒன்றை இப்போது திமுக நிறைவேற்றி இருக்கிறது. நாட்டில் வேறு யாருமே சொல்லாதது.

மகளிர் உரிமைத் தொகை திட்டம். நல்ல ஐடியாவாக இருக்கிறதா? எங்கு இருந்து வந்தாலும் எடுத்துக்கலாம் என்று சொல்லும் பெருந்தன்மை இருக்கிறதா? அதுதான் 15 கட்சிகளையும் ஒருங்கிணைத்து, இன்று ஒரு கூட்டணியாக வைத்து இருக்க முடிகிறது. அந்த பெருந்தன்மையை பார்த்து தான் நானும் முடிவு செய்தேன். திமுக கூட்டணியில் இணைந்தேன். இவ்வாறு கமல் பேசினார்.

## அலுவலகத்தில் லட்சக்கணக்கான பணம் பறிமுதல்; காங் எம்பி கார்த்தி சமாளிப்பு!



காரைக்குடி, ஏப் 21–

உங்க அலுவலகத்தில் தேர்தல் பறக்கும் படையினர் லட்சக்கணக்கான பணத்தை கைப்பற்றியதா? என நிருபர்கள் கேள்விக்கு காங்கிரஸ் எம்பி கார்த்தி சமாளிக்கும் வகையில் பதில் அளித்துவிட்டு நழுவி சென்றார். சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் உள்ள காங்., எம்.பி., கார்த்தி அலுவலகத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ரூ.13.40 லட்சத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். அங்கிருந்த இருவர் அதிகாரிகளிடம் இருந்து பணத்தை பறித்துக்கொண்டு தப்பினர். இது குறித்து மக்களை சந்தித்து ஓட்டு சேகரித்த, காங்கிரஸ் எம்பி கார்த்தியிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு, "என் கிட்ட பணம் இல்லை, யாரும் பணம் கொடுத்தீங்கன்னா வாங்கி கொள்கிறேன்" என்று காங்கிரஸ் எம்பி கார்த்தி சமாளிக்கும் வகையில் பதில் அளித்துவிட்டு நழுவி சென்றார்.





தொகுதி மறுவறையரை என்னும் தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை சீர்குலைக்கும் கருப்பு மசோதாவை, கழக தலைவர் அவர்களின் போர்க்குரல் தோக்கடித்துள்ளது. தமிழர்களுக்கான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை தக்கவைத்த கழக தலைவர் அவர்களின் செயல்பாடு மகத்தானது. #Delimitation என்னும் கருப்பு மசோதாவை தோற்கடிக்கப்பட்டதை இன்று கழக நிர்வாகிகளுடன் கேக் வெட்டி கொண்டாடி மகிழ்ந்த ராசிபுரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் மருத்துவர் மா.மதிவேந்தன் .













## தேவாலயங்களில் வாக்கு சேகரித்த திமுக வேட்பாளர் மா.மதிவேந்தன்... சிறப்பு பிரார்த்தனையுடன் ஆசிர்வாதம்!

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளராக களம் காணும் மா மதிவேந்தன் ராசிபுரம் பகுதியில் உள்ள தூய லூர்து அன்னை ஆலயம் மற்றும் இமானுவேல் ஆலயத்தில் கிறிஸ்துவ மக்களிடம் தனக்கு வாக்கு செலுத்துமாறு கேட்டுக் கொண்டு அவர்களுடன் செல்பி எடுத்துக் கொண்டார் . தொடர்ந்து தேவாலயத்தில் பிரார்த்தனை செய்த மா. மதிவேந்தனுக்கு சிறப்பு பிரார்த்தனையுடன் ஆசீர்வாத கூட்டமும் நடைபெற்றது . சிறுபான்மை மக்களின் முழு பாதுகாப்புக்கு திமுக என்னாளும் பாடுபடும் என கூறி வாக்கு சேகரித்த திமுக வேட்பாளர் மா மதிவேந்தன் வாக்காளர்களிடம் திமுகவின் சாதனைகளை துண்டறிக்கையாக வழங்கி பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் தன்னை வெற்றி பெற செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

## இளைஞர்களுக்கு விளையாட்டு அரங்கம்!

இராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் முழு கட்டமைப்புகளுடன் கூடிய விளையாட்டு அரங்கம் இல்லாமல் இருந்தது. கிடைக்கும் இடங்களில் எல்லாம் மாணவர்கள் தங்கள் விளையாட்டு தாகத்தை தீர்த்து கொண்டு வருகின்றனர்.

2021ம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று, மாண்புமிகு அண்ணன் திரு. Udhayanidhi Stalin அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையை கையில் எடுத்தவுடன், தொகுதிக்கு ஒரு MiniStadi–um என்ற கொள்கை முடிவை அறிவித்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு கவனத்திற்கு கொண்டு சென்று, நம் இராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள அண்ணாசாலை அரசு மேல்நிலைப் பள்ளியில் உள்ள இடத்தில் ரூ. 3.00 கோடி மதிப்பீட்டில் Turf + 9X9 Synthetic BasketBall Court, InDoor Shuttlecock Court, Hi–tech Zym, Toilets உள்ளிட்ட அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டுவருகிறது. அமையும் திராவிட மாடல் 2.O ஆட்சியில், திறப்பு விழா காணப்போகும் நமது இராசிபுரம் விளையாட்டு அரங்கும், இராசிபுரம் தொகுதியை சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமும் – பயிற்சியும் தந்து, பல விளையாட்டு வீரர் – வீராங்கனைகளை உருவாக்கி, மிகப்பெரிய #SportsHub ஆக மாறும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

## நன்றி மறக்க மாட்டோம்: உங்களுக்கே எங்கள் ஓட்டு... உழவர் சந்தையில் உதயசூரியனுக்கு வாக்கு கேட்ட மதிவேந்தனுக்கு மக்கள் கொடுத்த மகிழ்ச்சி!

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் அமைச்சரும் ராசிபுரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளரான மருத்துவர் மா.மதிவேந்திரன் ராசிபுரம் புதிய பஸ் நிலையம் அருகே உள்ள உழவர் சந்தை பகுதியில் அதிகாலை வாக்கு சேகரித்தார், அப்பொழுது அங்குள்ள விவசாயிகள் மதிவேந்தனிடம் உதயசூரியனுக்கு தான் வாக்களிப்போம் என்ற உறுதியளித்ததுடன் , அடையாளம் இல்லாமல் இருந்த எங்களுக்கு உழவர் சந்தை ஏற்படுத்திக் கொடுத்து எங்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவர்களை என்றும் மறக்க மாட்டோம் என்று கூறினார்கள்...

தொடர்ந்து உழவர் சந்தைக்கு வந்த பொதுமக்களுடன் செல்பி எடுத்து உற்சாகப்படுத்தினார் .

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020